[1979 ஏப்ரல் 9

கர்நாடகத்தில் உள்ள தமிழ் கல்வெட்டு சாசனங்கள்

*வினா என்—670 திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்கீழ்கண்ட வினாக்களுககு விடையளிப்பாரா :—

(அ) மைசூரில் கர்நாடக அரசின் வசம் உள்ள தமிழ் கல்வெட்டு சாசனங்களை மீண்டும் தமிழ்நாட்டிற்கு கொண்டுவர அரசு ஏற்பாடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமணி ஊராட்சி விவசாய கிடங்கு கட்டிடம்

* வினா எண்— 671 திரு. ப. சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செய்யாறு பஞ்சாயத்து யூனியனில் திருமணி ஊராட்சியில் ரூ. 50,000 செலவில் விவசாய கிடங்கு டெண்டர் விடப்படாமலேயே காண்ட்ராக்டருக்கு ஒப்படைக்கப் பட்டு வேலை செய்யப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் என்றால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) டெண்டர் விடுவதற்கு முன்பே மண்வேலைகள் செய்வதற்கு ஒரு ஒப்பந்தக்காரருக்கு ஊராட்சி ஒன்றிய ஆணையர் சந்தர்ப்பம் அளித்ததாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஆ) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி நண்பகல் உணவு சமையல்கூடம்

* வினா என் 672—சென்னை திரு. மு. அரங்கநாதன் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—